1968 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே அவர்களுக்கு இருக்கின்ற நேரம் மற்றக் கல்லூரி களோடு ஒப்பிட்டு வரையறை செய்யப்பட்டிருக்கிறது. 15 மாத காலத் திற்கு வாரத்திற்கு 2 பீரியேடுகள் வீதம் வகுப்புகள் எடுக்கும் விரிவுரை யாளர்களுக்கு தனி ஊதியமாக 150 ரூபாயும், 15 மாத காலத்திற்கு வாரத்திற்கு 4 பீரியேடுகள் வீதம் வகுப்புகள் எடுக்கும் விரிவுரையாளர் களுக்கு தனி ஊதியமாக ரூ. 225-ம் அளிக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Apart from having these post diploma courses which have been lntroduced recently, will the Government take steps to introduce research courses in law like M. L. in Civil and Criminal law in the Law College, Madras? At present in the University, there is post-graduate teaching for M. L. only in the subject of international law? There is no scope for civil and criminal law teaching there. Will the Government therefore introduce these course in Law College? மு.ப. 9–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்பேர்ப்பட்ட முயற்சி இருக்கிறதா என்ற விவரக் குறிப்பு இல்லை. கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்து விவரங்களை ஆராய விரும்புகிறேன்.

THIRU B. VENKATASAMI: May I know the number of candidates studying in the first and second year law course in the evening classes?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

DR. H. V. HANDE: The Principal of this college is getting Rs. 200 extra for looking after the evening classes. But it is the lecturers who have to teach and look after the work and not the Principal. In view of that and in view of the fact that there is great demand and rush for these evening courses and in view of the fact that there is an impression among students that evening courses are given a step-motherly treatment, will the Government see that these lecturers are paid something extra so that they can take more interest and the students will also have the comfort that they are looked after well?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாலைக் கல்லூரியை நிர்வகிக்கின்ற முதல்வருக்கு 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மற்ற லெச்சரர்களுக்குக் கொடுப்பதுபற்றி எந்தக் கோரிக்கையும் அவர்களிடத்தில் இருந்து வரவில்லை. ஏதேனும் வருமானல் அதுபற்றி ஆராயப்படும்.

கீழ்த்திசைக் கல்லூரி, பூம்புகார்.

*126 வின.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, பூம்புகார் நகரில் நடந்துவரும் கீழ்த்திசைக் கல்லூரியில் 1966–67-ம் ஆண்டு வரவு—செலவுக் கணக்குகள் அரசாங்கத் துறையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டுள்ளதா?

(இ) 1967–68-ம் ஆண்டில் செப்டம்பர் மாத முடிவு வரை அந்தக் கல்லூரியின் மொத்த வரவு—செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. மேலையூர் பூம்புகாரிலுள்ள இந்தியக் கீழ்த்திசைக் கல்லூரியின் 1966–67-ம் ஆண்டின் கணக்குகள் தனிப்பட்ட தணிக்கையாளர் ஒருவரால் தணிக்கை செய்யப்பட்டன.

(இ) 1967–68-ம் ஆண்டு செப்டம்பர் வரை இக் கல்லூரியின் மொத்த வரவு செலவு விவரங்கள் வருமாறு :—

	ரூபாய்.
வரவு	2,38,894·51
செலவு	63,324·82

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : அங்கு பணிபுரியும் டீச்சிங் ஸ்டாப்பு களுக்கு சம்பளம் தரப்படவில்லை என்பது போன்ற பல புகார்கள் தெரிவிக் கப்படுகிறதே, அவை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. குறைபாடுகள் எழுதப்பட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : கீழ்திசைக் கல்லூரியில் கற்றுக் கொடுக்கிற பாட திட்டங்களின் விவரம் என்ன என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். கணேசன் : கிழ்த்திசைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகிற மாணவர்களுக்கு எதிர்காலத்தில் எந்த விதமான வேலை வாய்ப் பும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதைக் கலைக் கல்லூரி யாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறதா, அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கல்லூரி அண்மை யில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் படித்துப் பட்டம் பெற்று மாணவர்கள் வெளியே வந்து வேலை கிடைக்கிறதா, இல்லை திண்டாடும் நிலை இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. இருந்தும் இதில் கலைக் கல்லூரியும் சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை இருக் கிறது. இந்தக் கல்லூரிக்கு உதவி செய்கிற தேவாலயங்கள், மடங்கள் இங்கிருந்தும் இதற்கு உதவி தருவதாக வாக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் பரிசீலித்து வருகிறார். அதற்கு வழிவகை இருக்குமானால் முடிவு எடுக்கப்படும்.

பள்ளம்பாறையில் சிமெண்டு தொழிற்சாலை.

***127 வினா.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் அருகில் பள்ளம் பாறை கிராமப் பகுதியில் சிமெண்ட் தயாரிப்புக்கான மூலப் பொருள்கள் ஏராளமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அங்கே ஒரு சிமெண்ட் ஆலை நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுகாவிலுள்ள பள்ளம்பாறை சாத்தான் குளம் ஆகிய பிரதேசங்களில் ஏராளமான கங்கார் ரக சுண்ணம்புக் கற்படி வங்கள் இருக்கின்றன. அவற்றின் அளவு 7·7 மில்லியன் டன்கள் என மதிப்பிடப்படுகிறது. அரசாங்க புவி அமைப்பு இயல் ஆராய்ச்சி இலாகா செய்த பரிசோதனைகள் மூலம் இவை குறைந்த பட்ச சுண்ணம்புச் சத்தும் அதிகப் பட்ச மணற்கலப்பும் கொண்டவை எனத் தெரிகிறது. இவை சிமெண்ட் செய்ய ஏற்றவையல்ல.

(உ) அதுமாதிரி உத்தேசம் எதுவும் இல்லை.